# நாங்கள் விசுவாசிப்பது...

# What we BELIEVE



Pastor. A. Samuel

# பொருளடக்கம்


| உட்தலைப்புகள் | பக்கம் |
| --- | --- |
| ஒரே தேவன் - கர்த்தராகிய இயேசுகிறிஸ்து | 1 |
| கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் | 2 |
| மூலபாவம் | 3 |
| தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார் | 4 |
| முன்குறிக்கப்படுதல் | 6 |
| மறுபடியும் பிறப்பது | 7 |
| ஏழு சபைக்காலங்களும் ஏழு முத்திரைகளும் | 8 |
| மனுஷகுமாரனின் ஊழியம் | 13 |
| மணவாட்டி ஊழியம் | 14 |
| சரீர மறுரூபமாக்கப்படுதலும் எடுத்துக்கொள்ளப்படுதலும் | 16 |

# முன்னுரை

கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமம் மகிமைப்படுவதாக. கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே! தேவனுடைய பெரிதான கிருபையினால் கல்வாரி கூடாரத்தின் ஊழியமானது ஏழாம் சபையின் தூதன் மூலமாக வெளிப்படுத்தப்பட்ட, வேதத்தில் மறைந்திருக்கின்ற இரகசியங்களையும் மேலான வெளிப்பாடுகளையும் கொண்டு இயேசுகிறிஸ்துவுக்கென்று ஆத்துமாக்களை ஆயத்தப்படுத்த வேண்டுமென்ற நோக்கத்துடன் நடைபெற்று வருகிறது.

தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட இந்த ஸ்தலத்தில் உண்மையான சத்தியத்தைத் தேவஆவியைக் கொண்டு பகுத்துப் போதிப்பதுடன், இந்த மேன்மையான செய்தியை உலகத்தின் பலபாகங்களில் இருக்கும் மற்றவர்களும் கேட்டு வருகைக்கு ஆயத்தமாகி, எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்குபெற வேண்டுமென்ற ஆத்தும பாரத்துடன் இணையதளம் மூலமாகவும் கொடுக்கப்படுகிறது. அநேக தேவனுடைய பிள்ளைகள் முழுமையான சத்தியத்தைக் கேட்டுப் பயனடைகின்றனர்.

நாங்கள் விசுவாசிப்பது... என்ற இக்கைப்பிரதியை எங்கள் சபையைச் சார்ந்த **சகோ. வே. தினகரன்** அவர்கள் எழுதியுள்ளார். இக்கைப்பிரதியை வாசிக்கின்ற நீங்களும் முழுமையான சத்தியத்தை உணர்ந்து கொண்டு கர்த்தருடைய வருகைக்கு ஆயத்தமாவீர்கள் என்று விசுவாசிக்கிறேன். தேவன் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

...ஆமென்...

கிறிஸ்துவின் பணியில்,
போதகர். A. **சாமுவேல்**,
கல்வாரி கூடாரம்,
வளசரவாக்கம்,
சென்னை - 600087.

# நாங்கள் விசுவாசிப்பது... (What We Believe)

## 1. ஒரே தேவன் - கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (One God – Lord Jesus Christ)

இயேசுவே தேவன் என்பதுதான் மிக உன்னதமான வெளிப்பாடு (Supreme Revelation). ஆதியிலே தேவன் நித்திய ஆவியாக (Eternal Spirit) இருந்தார். அவர் தானாகவே ஜீவிக்கிறவராக (Elohim) இருந்தார். அவருக்குள்ளிருந்து வார்த்தை (Logos) என்ற தேவனுடைய ஆவிக்குரிய சரீரம் (God's Theophany Body) வெளிப்பட்டது. அவர்தான் கிறிஸ்து. அந்தச் சரீரத்திலிருந்துதான் தேவன் வார்த்தையை உரைத்து உலகத்தைச் சிருஷ்டித்தார். அதே சரீரத்தில்தான் அவர் ஆபிரகாமுக்கு மெல்கிசேதேக்காக (Melchizedek) வெளிப்பட்டார்.

அந்தச் சரீரத்தில்தான் அவர் அநேக பழைய ஏற்பாட்டு பரிசுத்தவான்களுக்குக் கர்த்தருடைய தூதனானவராக (Angel of the Lord) தோற்றமளித்தார். அதே தேவன் மரியாளின் கர்ப்பத்தின் மூலமாக இயேசுவாக மாம்சத்தில் வெளிப்பட்டார். (God Manifested in flesh). இந்த இயேசுதான் அந்தக் கிறிஸ்து. பழைய ஏற்பாட்டின் யேகோவாதான் புதிய ஏற்பாட்டின் இயேசு கிறிஸ்து (Jehovah of the old Testament is Jesus Christ of the New Testament). இயேசு மரித்து உயிர்த்தெழுந்த பின்பு

பரிசுத்த ஆவியாக பெந்தெகொஸ்தே நாளில் வந்து, தம்முடைய ஜனங்கள் மத்தியில் வாசம்பண்ணினார். இவ்விதமாகத்தான் வேதாகமம் ஒரே தேவனைப் போதிக்கிறது. முழு வேதாகமமும் இயேசுகிறிஸ்துவின் வெளிப்பாடாக இருக்கிறது. (Whole Bible is the Revelation of Jesus Christ).

## 2. கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம்

**(Baptism in the Name of Lord Jesus Christ)**

வேதத்தின்படி ஒரே ஒரு ஞானஸ்நானம் தான் உண்டு. அதுதான் கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே கொடுக்கப்படும் ஞானஸ்நானம். நீங்கள் மனந்திரும்பி, ஒவ்வொருவரும் பாவமன்னிப்புக்கென்று இயேசுகிறிஸ்துவின் நாமத்தினாலே ஞானஸ்நானம் பெற்றுக்கொள்ளுங்கள், அப்பொழுது பரிசுத்த ஆவியின் வரத்தைப் பெறுவீர்கள் (அப்போஸ்தலர் 2 : 38). பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்பது நாமமல்ல. திருத்துவக்காரர் சொல்வதுபோல் அது மூன்று நபர்களைக் குறிப்பதும் அல்ல. அது ஒரே தேவனின் மூன்று பட்டப்பெயர்களாக (Titles) மூன்று தன்மைகளாக (Attributes), மூன்று ஸ்தானங்களாக (Offices), மூன்று வெளிப்படுத்தலாக (Manifestations) இருக்கிறது. அவருடைய நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து (கர்த்தர் - பிதா; இயேசு - குமாரன்; கிறிஸ்து - பரிசுத்த ஆவி).

அவர் உலகத்தையும் மனுஷனையும் சிருஷ்டிக்கும்போது பிதாவாக (Father) இருந்தார். அவர் மாம்சத்தில் பிறக்கும்போது குமாரன் (Son) என்று அழைக்கப்பட்டார். அவர் மரித்து உயிர்த்தெழுந்த பின்பு பரிசுத்த ஆவியாக (Holy Ghost) வந்தார். " நான் என் பிதாவின் நாமத்தில் வந்திருக்கிறேன்" என்று யோவான் 5:43ல் இயேசுகிறிஸ்து சொல்லியிருக்கிறார். அப்படியென்றால் பிதாவுக்கு ஒரு நாமம் உண்டு. இயேசு என்பதே அந்த நாமம். மத்தேயு 28:19 ல் இயேசுகிறிஸ்து என்ன செய்யச் சொன்னாரோ, அதைத்தான் அப்போஸ்தலர் 2:38 ல் பேதுரு செய்திருக்கிறான். பிதா குமாரன் பரிசுத்த ஆவியின் நாமம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து என்ற வெளிப்பாடு, பெந்தெகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியைப் பெற்றபின் பேதுருவுக்கு வந்தது. வேதாகமத்தில் ஒருவரும் பிதா குமாரன் பரிசுத்த ஆவி என்ற பட்டப்பெயர்களால் ஞானஸ்நானம் பெறவில்லை. எல்லாரும் பாவமன்னிப்புக்கென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் தான் ஞானஸ்நானம் பெற்றார்கள்.

## 3. மூலபாவம் (Original Sin)

இரத்தத்தினால் தான் உலகத்தில் பாவம் வந்தது, அது கனியைப் புசித்ததினால் அல்ல. சர்ப்பமானது ஏவாளை வஞ்சித்தது (beguiled), அவள் வஞ்சிக்கப்பட்டாள். அதுதான் மூலபாவம். ஆபேல் ஆதாமின் குமாரனாக இருக்கிறான். ஆனால் காயீன் சர்ப்பத்தின் குமாரனாக இருக்கிறான்.

ஆபேலுக்கு மூலபாவம் பற்றிய வெளிப்பாடு இருந்தது. ஆனால் காயீனுக்கு அந்த வெளிப்பாடு இல்லை. இரத்தத்திற்குப் பதிலாக இரத்தத்தைத்தான் கொடுக்கவேண்டும் என்பதால் ஆபேல் ஆட்டுக்குட்டியைப் பலிசெலுத்தினான். ஆனால் காயீன் கனிகளைக் காணிக்கையாகக் கொண்டுவந்தான். தேவன் ஆபேலின் காணிக்கையை அங்கிகரித்தார். ஆனால் காயீனின் காணிக்கையை அங்கிகரிக்கவில்லை (ஆதியாகமம் 4:4,5). பழத்தைப் புசித்ததால்தான் பாவம் வந்ததென்றால், இயேசுகிறிஸ்து கல்வாரி சிலுவையில் இரத்தம் சிந்தி மரிக்க வேண்டிய அவசியம் இல்லை. அவர் உலகத்தின் பாவத்தைச் சுமந்து தீர்க்க வேண்டுமென்றால் இரத்தத்திற்குப் பதிலாக இரத்தத்தைக் கொடுக்கவேண்டும்.

## 4. தேவன் ஒரு தீர்க்கதரிசியை அனுப்பினார் (God sent a Prophet)

மல்கியா 4:5, 6 ல் எழுதியிருக்கிறபடி, கர்த்தருடைய பெரிதும் பயங்கரமான நாள் (Great and Dreadful Day) வருவதற்கு முன்னே எலியா தீர்க்கதரிசி அனுப்பப்படவேண்டும். பெரிய நாள் (Great Day) என்று சொல்லும்போது, அது இயேசுகிறிஸ்து உலகத்தில் பிறந்த நாளைக் குறிக்கிறது. அந்தப் பெரிய நாளுக்கு முன்பாக அனுப்பப்பட்ட எலியா, யோவான் ஸ்நானன் (John the Baptist). அவன் கர்த்தருடைய முதலாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கிறான்.

பயங்கரமான நாள் (Dreadful Day) என்று சொல்லும்போது அது நியாயத்தீர்ப்பு நாளையும் உலகத்தின் முடிவையும் குறிக்கிறது. புறஜாதிகளுக்கு அனுப்பப்பட்ட தீர்க்கதரிசியாகிய சகோ. வில்லியம் மரியன் பிரன்ஹாம் (William Marrion Branham) என்பவர்தான் இந்த பயங்கரமான நாளுக்கு முன்பாக அனுப்பப்பட்ட எலியா. இவர் இயேசுகிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு முன்னோடியாக இருக்கிறார்.

யோவான் ஸ்நானன் பழைய ஏற்பாட்டு பிதாக்களின் இருதயத்தை (விசுவாசத்தை) தேவனால் தெரிந்துகொள்ளப்பட்ட விசுவாசிகளின் (God's Elect Then) இருதயத்திற்குத் திருப்பினான். சகோ. பிரன்ஹாம் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட பிள்ளைகளின் (God's Elect Today) இருதயத்தை ஆதி அப்போஸ்தல பிதாக்களின் விசுவாசத்திற்குத் திருப்பியிருக்கிறார். வெளிப்படுத்தல் 10:6 ல் எழுதியிருக்கிறபடி, சகோ. வில்லியம் பிரன்ஹாம் நாம் வாழுகிற இந்தக் கடைசி சபைக்காலமாகிய ஏழாம் சபையின் தூதனாக (Seventh Angel) இருக்கிறார். வெளிப்படுத்தல் 10:1 ல் எழுதியிருக்கிறபடி, இந்தக் கடைசி காலத்தில் இயேசுகிறிஸ்து பலமுள்ள தூதனாக (Mighty Angel) வந்து ஏழு முத்திரைகளைத் (Seven Seals) திறந்து எல்லா இரகசியத்தையும் தம்முடைய தீர்க்கதரிசிக்கு வெளிப்படுத்தினார். கர்த்தருடைய இரண்டாம் வருகைக்கு ஆயத்தமாகும்படி, தீர்க்கதரிசி அந்த இரகசியத்தை அவருடைய மணவாட்டிக்கு (Bride) வெளிப்படுத்தியிருக்கிறார்.

## 5. முன்குறிக்கப்படுதல் (Predestination)

உலகத்தில் பிறந்த ஒவ்வொருவரும் முடிவாகப் போய்ச் சேரும் இடம் (Destination) ஒன்று இருக்கிறது. தேவன் தம்முடைய முன்னறிவின்படி (Fore Knowledge) யார் யார் எங்கே போய்ச் சேருவார்கள் என்று முன் குறித்திருக்கிறார். இந்த உலகத்தில் உள்ள எல்லாரையும் தேவன் அறிந்திருக்கிறார். இனிமேல் பிறக்கப் போகிறவர்களையும் அவர் அறிந்திருக்கிறார். அவர் சர்வஞானியாக (Omniscient) இருப்பதால், ஒரு மனுஷன் அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்வானா அல்லது புறக்கணிப்பானா என்பதை தேவன் முன்னமே அறிந்திருக்கிறார். அவருடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளுகிறவர்கள் நித்தியத்திற்குப் (Eternity) போகும்படி முன்குறிக்கப் பட்டிருக்கிறார்கள். அவருடைய வார்த்தையை ஏற்றுக் கொள்ளாதவர்கள் நரக அக்கினியில் போய்ச் சேரும்படி முன்குறிக்கப்பட்டிருக்கிறார்கள்.

தேவனால் தெரிந்துகொள்ளப்பட்டு (எபேசியர் 1:4), உலகத் தோற்றத்திற்கு முன்னே முன்குறிக்கப்பட்டவர்களின் ஆத்துமாவில், அவர்கள் பிறக்கும்போதே தேவன் தம்முடைய ஜீவ அணுவை அவர்களுக்குள் (Gene of God) வைக்கிறார். அந்த வித்து எப்பொழுதும் அவர்களுக்குள் இருக்கிறது. ஆனால், அவர்கள் தேவனுடைய வார்த்தையைக் கேட்கும் தருணம் வரும்வரை அந்த வித்து உறக்க நிலையில் (Dormant) இருக்கிறது.

அவர்கள் வார்த்தையைக் கேட்கும்போது, பரிசுத்த ஆவியானவர் அந்த வித்தை உயிர்ப்பிக்கிறார் (Seed Quickened). அப்போது அவர்கள் தங்களைத் தேவனுடைய குமாரனும் குமாரத்தியுமாக வெளிப்படுத்துகிறார்கள். தேவன் தம்முடைய முன்னறிவினால் அவரால் தெரிந்துகொள்ளப்பட்ட ஒவ்வொருவரையும் முன்குறித்து, அவர்களின் பெயரை உலகத்தோற்றத்திற்கு முன்பே ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புத்தகத்தில் (Lamb's Book of Life) எழுதியிருக்கிறார். அந்தப் புத்தகத்தில் எழுதப்பட்டவர்களைத் தேடவும் இரட்சிக்கவுமே இயேசுகிறிஸ்து உலகத்துக்கு வந்தார்.

## 6. மறுபடியும் பிறப்பது (New Birth)

ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான், என்று இயேசுகிறிஸ்து யோவான் 3:3ல் சொல்லியிருக்கிறார். இந்த மறுபடியும் பிறந்த அனுபவம்தான் புதிய பிறப்பாக (New Birth) இருக்கிறது. தேவனுடைய சொந்த ஜீவனாகிய (God's Own Life) பரிசுத்த ஆவியைப் (Holy Ghost) பெறுவதே மறுபடியும் பிறத்தலாகும். நீதிமானாக்கப்படுதல் (Justification), பரிசுத்தமாக்கப்படுதல் (Sanctification), பரிசுத்த ஆவியின் அபிஷேகம் (Baptism of the Holy Ghost) ஆகிய இவைகள் மறுபடியும் பிறத்தலின் மூன்று படிகளாக (Three Stages) இருக்கிறது. ஒரு மனுஷன் தேவனை விசுவாசித்து இந்த நேரத்திற்குரிய செய்தியை (Message of the Hour)

ஏற்றுக்கொண்டு கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் நாமத்தில் ஞானஸ்நானம் பெறும்போது அவன் நீதிமானாக்கப்படுகிறான்.

இயேசுகிறிஸ்துவின் இரத்ததினாலே மாம்சத்திலும் ஆவியிலும் உள்ள அசுசி நீங்கி சுத்திகரிக்கப்படுவதே பரிசுத்தமாக்கப்படுதலாகும். அப்படி பரிசுத்தமாக்கப்பட்டாலும் அவனுடைய மறுபிறப்பு இன்னும் முற்றுப்பெறவில்லை. ஆனால் தேவன் அவனுடைய விசுவாசத்தை அங்கிகரித்து, பரிசுத்த ஆவியாக அவனுக்குள் வந்து வாசம்பண்ணி, அவனைச் சகல சத்தியத்துக்குள்ளும் நடத்தும்போது அவனுடைய மறுபிறப்பு முற்றுப்பெறுகிறது. மறுபடியும் பிறப்பது, ஆவியினால் பிறப்பது, வார்த்தையினால் பிறப்பது, தேவனால் பிறப்பது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம், தேவனுடைய சொந்த ஜீவனைப்பெறுவது, ஆவிக்குரிய விவாக இணைப்பு (Spiritual Marriage Union) போன்ற வார்த்தைகள் மறுபடியும் பிறப்பதின் அனுபவத்தைக் குறிக்கின்றன. மறுபடியும் பிறக்காமல் ஒருவரும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்க முடியாது.

## 7. ஏழு சபைக்காலங்களும் ஏழு முத்திரைகளும் (Seven Church Ages and Seven Seals)

தேவன் ஒவ்வொரு காலத்துக்கும் ஒவ்வொரு செய்தியைக் கொடுக்கிறார் (God allots a specific Message to each age). பேழைக்குள் வந்து அழிவிலிருந்து தப்பித்துக்கொள்ள வேண்டும் என்பது நோவாவின் செய்தி. ஆட்டுக்குட்டியின் இரத்தத்தைப் பூசி விடுதலையாக வேண்டும் என்பது மோசேயின் செய்தி.

ஆதி அப்போஸ்தலர்களின் நாட்களுக்குப் பிறகு, தேவனுடைய வார்த்தைக்குப் பதிலாக மனுஷீக உபதேசங்கள் (Man made Doctrines) சபைக்குள்ளே நுழைய ஆரம்பித்தன. தேவன் ஆசியாவில் உள்ள எபேசு, சிமிர்னா, பெர்கமு, தியத்தீரா, சர்தை, பிலதெல்பியா, லவோதிக்கேயா என்னும் ஏழு சபைகளைத் தெரிந்து கொண்டு (வெளிப்படுத்தல் 1:11) ஒவ்வொரு சபைக்கும் ஒரு தூதன் (Messenger) மூலமாக ஒரு செய்தியை (Message) அனுப்பினார். அந்த ஏழு சபைகளின் ஆவிக்குரிய நிலைமையானது வரப்போகிற ஏழு சபைக்காலங்களுக்கு ஒரு அடையாளமாக இருக்கிறது.

பவுல், இரேனியஸ், மார்ட்டின், கொலம்பா, லூத்தர், வெஸ்லி, சகோ.பிரன்ஹாம் என்பவர்களே அந்த ஏழு சபைகளின் தூதர்கள். இவர்கள் தங்களுடைய சபைக்காலத்திற்குரிய வெளிப்படுத்தப் பட்ட வார்த்தையைத் தேவனிடத்திலிருந்து நேரடியாகப் பெற்றார்கள். அந்தந்த சபைக்காலத்தில் தேவனால் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் (Elected People) அந்த நேரத்திற்குரிய செய்தியை ஏற்றுக்கொண்டு இரட்சிக்கப்பட்டார்கள். ஆனால், சபைக்காலங்களுக்குக் கொடுக்கப்பட்ட செய்தி குறைவான செய்தியாக (Part word) இருந்தது. ஆகையால் இயேசுகிறிஸ்து அவர்களுக்காகப் பரிந்து பேச வேண்டியதாயிருந்தது. சபைக்கால பரிசுத்தவான்களைத் தம்முடைய இரத்தத்தின் கீழ் கொண்டு வந்து அவர்களுடைய அறியாமையை அவர் மன்னித்தார்.

ஆனால், இந்தக் கடைசி காலத்தில் தேவன் ஏழு முத்திரைகளை உடைத்துப் பரிபூரணமான வார்த்தையைக் (Perfect word or Fullness of the Word) கொண்டு வந்திருக்கிறார். நிறைவானது வரும்போது குறைவானது ஒழிந்துபோகும் (1 கொரிந்தியர் 13:10). இன்றைக்கு இருக்கிற ஸ்தாபனங்கள் (Denominations) இன்னும் குறைவான செய்தியிலேயே இருக்கின்றன. எப்படி வேதபாரகர் பரிசேயர், இயேசுகிறிஸ்து தங்கள் மத்தியில் வந்திருந்தும் அவரை அறியாமல் மோசேயின் நியாயப்பிரமாணத்தில் இருந்தார்களோ, அதைப்போலவே ஸ்தாபனங்கள் இருக்கிறது. ஸ்தாபனங்கள் மனுஷனால் ஏற்படுத்தப்பட்டதாயிருக்கிறது. இயேசுகிறிஸ்து மத்தேயு 15:9ல் சொன்னதுபோல, அவர்களுடைய உபதேசங்கள் மனுஷனுடைய கற்பனைகளாகவும், கோட்பாடுகளாகவும் இருக்கிறது. இயேசுகிறிஸ்து அவர்கள் மத்தியில் இல்லாததினால் ஸ்தாபனங்களில் ஜீவன் இல்லை. அவர் தம்முடைய வார்த்தை எங்கே இருக்கிறதோ அங்கே இருக்கிறார். இயேசுகிறிஸ்து தம்முடைய மணவாட்டியின் மத்தியில் இருக்கிறார்.

வேதாகமம் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்தது. (The Bible was sealed with Seven Seals) (வெளிப்படுத்தல் 5 : 1) அந்த முத்திரைகளை உடைத்துப் புத்தகத்தைத் திறந்து வாசிக்க ஒருவனும் பாத்திரவானாகக் காணப்படவில்லை. யூதா கோத்திரத்துச் சிங்கமாகிய கர்த்தராகிய இயேசுகிறிஸ்து

மரணத்தையும், பாதாளத்தையும், பிசாசையும் ஜெயித்து ஏழு முத்திரைகளையும் உடைத்துப் புத்தகத்தைத் திறந்தார். ஆனால், வெளிப்படுத்தல் 10 : 6ல் எழுதியிருக்கிறபடி, ஏழாம் தூதனின் செய்தியின் மூலமாகத்தான் தேவரகசியம் வெளிப்படவேண்டும். எனவே வேதத்தில் மறைந்திருந்த இரகசியத்தைக் கர்த்தர் ஏழாம் தூதனுக்கு வெளிப்படுத்தினார். ஏழாம் தூதன் அதைச் சபைக்கு வெளிப்படுத்தினார். இயேசுகிறிஸ்து யார் என்றும், அவருடைய திட்டம் என்ன என்பதும் (Jesus and His program) இப்பொழுது மணவாட்டிக்கு வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது. "சபைகளில் இவைகளை உங்களுக்குச் சாட்சியாக அறிவிக்கும்படிக்கு இயேசுவாகிய நான் என் தூதனை அனுப்பினேன்" (வெளிப்படுத்தல் 22:16) "இனி காலம் செல்லாது, ஆனாலும் தேவன் தம்முடைய ஊழியக்காரராகிய தீர்க்கதரிசிகளுக்குச் சுவிசேஷமாய் அறிவித்தபடி, ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும்" (வெளிப்படுத்தல் 10 : 6) என்ற வேதவாக்கியங்கள் நிறைவேறியிருக்கிறது.

ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு (Revelation of the Seven Seals) சாத்தானையும் அவனுடைய கிரியைகளையும் அம்பலப்படுத்தியிருக்கிறது. முதல் நான்கு முத்திரைகள் (First Four Seals), ஏழு சபைக்காலங்களாக சாத்தான் எப்படி மதவல்லமை (Religious Power), அரசியல் வல்லமை (Political Power), பிசாசின் வல்லமை (Demonic Power) இவற்றால்

சபையை வஞ்சித்தான் என்பதையும், இந்தக் கடைசி காலத்தில் அந்த மூன்று வல்லமையையும் ஒன்று சேர்த்து, சாத்தான் எப்படி மணவாட்டிக்கு விரோதமாகச் செயல்படுகிறான் என்பதையும் வெளிப்படுத்துகிறது. தேவன் தம்முடைய ஜனங்களுக்கு, அவனை எதிர்கொள்ள, சிங்கத்தின் ஆவியையும், காளையின் ஆவியையும், மனுஷனின் ஆவியையும், கழுகின் ஆவியையும் கொடுத்தார். நாலாம் முத்திரையின் முடிவில் தேவன் தம்முடைய மணவாட்டியை மேலே எடுத்துக்கொள்ளுகிறார்.

ஐந்தாம் முத்திரை (Fifth Seal) பலி பீடத்தின் கீழ் உள்ள ஆத்துமாக்கள் எப்படி நித்திய ஜீவனைப் பெறுகிறார்கள் என்று வெளிப்படுத்துகிறது. அவர்கள் தேவனுடைய ஜனங்கள் என்ற ஒரே காரணத்திற்காக, ஹிட்லர் (Hitler), முசோலினி (Mussolini), ஸ்டாலின் (Stalin), போன்ற கொடுங்கோல் மன்னர்களால் கொல்லப்பட்ட யூதர்களாவார்கள். ஆறாம் முத்திரை (Sixth Seal), சுத்திகரிப்பின் முத்திரை (Purging Seal) அல்லது நியாயத்தீர்ப்பின் முத்திரையாக (Judgment Seal) இருக்கிறது. அதுதான் உலகத்தில் வரப்போகிற மகா உபத்திரவக்காலம் (Great Tribulation). அப்பொழுது அந்திகிறிஸ்து (Anti Christ) புத்தியில்லாத கன்னிகைகளையும் (Foolish Virgins) தேவனால் தெரிந்து கொள்ளப்பட்ட 144000 யூதர்களையும் கொன்றுபோடுவான். இந்த முத்திரை, மூன்றாம் உலக யுத்தமாகிய அர்மகெதோன் (Armageddon) யுத்தத்தில் முடிவடையும். பூமியானது அணு வல்லமையினாலும் (Atomic Fire)

தேவனுடைய அக்கினியினாலும் (God's Holy Fire) அழிக்கப்பட்டு, ஆயிரவருட அரசாட்சிக்காக(Millennium) புதிதாக்கப்படும். ஏழாம் முத்திரை (Seventh Seal)கர்த்தருடைய வருகையாக இருக்கிறது. அது, முத்திரைகள் (Seals), எக்காளங்கள் (Trumpets) கோபகலசங்கள் (Vials) ஆகியவற்றின் முடிவாக இருக்கிறது. அது நித்தியம் வரைக்கும் (Eternity) செல்கிறது. ஏழு முத்திரைகளும் திறக்கப்பட்டாயிற்று (All the Seven Seals are Opened). நாம் ஏழாம் முத்திரையில் இருக்கிறோம். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படும் நாளுக்காகவும், நேரத்திற்காகவும் காத்திருக்கிறோம்.

## 8. <u>மனுஷகுமாரனின் ஊழியம்</u>

## <u>(Son of Man Ministry)</u>

இயேசுகிறிஸ்து உலகத்தில் வரும்போது செய்த 3½ வருட ஊழியம் யூதர்களுக்குக் (Jews) கொடுக்கப்பட்ட மனுஷகுமாரனின் ஊழியமாகும். அந்த ஊழியத்தில் மூன்று இழுப்புகள் (Three Pulls) இருந்தது. முதலாம் இழுப்பு, சுகமாக்குதல் (Healing), இரண்டாம் இழுப்பு, இருதயத்தின் இரகசியத்தை வெளிப்படுத்துவது (Prophecy or Revealing the secret of the heart), மூன்றாம் இழுப்பு, வார்த்தையை வெளிப்படுத்துவது (Opening of the Word). புறஜாதிகளுக்கும் (Gentiles) அதே விதமாக ஊழியம் கொடுக்கப்படவேண்டும். எனவே, லூக்கா 17 : 30 ல் இயேசுகிறிஸ்து முன்னறிவித்தபடி,

ஏழாம் தூதனாகிய சகோ. வில்லியம் பிரன்ஹாம் என்ற ஒரு மனுஷன் மூலமாக மனுஷகுமாரனின் ஊழியம் மறுபடியும் வந்தது. சகோ.பிரன்ஹாம் அந்த மனுஷகுமாரன் அல்ல. இயேசு கிறிஸ்துவே மனுஷகுமாரனாக இருக்கிறார்.

மனுஷகுமாரனாகிய இயேசு செய்த அதே ஊழியத்தை, சகோ. பிரன்ஹாம் என்ற மனுஷன் மூலமாக கர்த்தர் உலகத்துக்குக் கொண்டு வந்தார். இயேசுகிறிஸ்துவின் ஊழியத்தில் இடம்பெற்ற மூன்று இழுப்புகள் சகோ. பிரன்ஹாமின் ஊழியத்திலும் இடம்பெற்றது. லட்சக்கணக்கான மக்கள் சுகம் பெற்றார்கள். மனுஷர்களின் இருதயத்திலுள்ள இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டது. அவர் மூலமாகக் கர்த்தர் வேதத்தில் மறைந்திருந்த எல்லா இரகசியத்தையும் வெளிப்படுத்தி யிருக்கிறார்.

## 9. மணவாட்டி ஊழியம் (Bride Ministry)

இயேசுகிறிஸ்துவின் மீட்பின் திட்டத்தில் (Plan of Redemption) கடைசிகால மணவாட்டிக்கு ஒரு ஊழியம் கொடுக்கப்பட்டிருக்கிறது. அதுதான் கடைசி காலத்துக்குக் கொடுக்கப்பட்ட கடைசி ஊழியம் (Final Ministry to the Final Age). இயேசுகிறிஸ்துவின் மணவாட்டியின் சத்தம் இந்தக் கடைசி காலத்துக்குக் கொடுக்கப்பட்ட கடைசி சத்தமாக இருக்கிறது (Final Voice to the Final Generation). வெளிப்படுத்தல் 10:1முதல்7 வரை வாசிக்கும்போது, பலமுள்ள தூதன் கிறிஸ்து

திறக்கப்பட்ட புத்தகத்தோடு வானத்திலிருந்து இறங்கி வருகிறார். அவர் ஏழாம் தூதனுக்கு இரகசியத்தை வெளிப்படுத்துகிறார். ஏழாம் தூதனுடைய செய்தி அதை மணவாட்டிக்கு வெளிப்படுத்துகிறது. வெளிப்படுத்தல் 10:8-11 ல், மணவாட்டிக்கு அடையாளமாக இருக்கும் யோவான் (John types the End time Birde) பலமுள்ள தூதனின் கையிலிருந்து அந்த புஸ்தகத்தை வாங்கி அதைப் புசிக்கிறான். பின்பு அவன் ஜனங்களுக்கும், ஜாதிகளுக்கும் பாஷைக்காரருக்கும் தீர்க்கதரிசனம் உரைக்கவேண்டும் என்று சொல்லப்பட்டது. அதுதான் மணவாட்டியின் ஊழியம். வெளிப்படுத்தல் 22:16 தீர்க்கதரிசியின் ஊழியத்தைக் (Prophet Ministry) குறிக்கிறது. வெளிப்படுத்தல் 22:17 மணவாட்டியின் ஊழியத்தைக் (Bride Ministry) குறிக்கிறது.

தீர்க்கதரிசி வில்லியம் பிரன்ஹாமுக்குப் பின், எபேசியர் 4 : 11 ல் எழுதியிருக்கிறபடி, கர்த்தர் உலகமெங்கும் இருக்கும் அபிஷேகம் பண்ணப்பட்டப் போதகர்கள் (Anointed Preachers) மூலமாக இரகசியத்தை வெளிப்படுத்தி, வார்த்தையை இன்னும் அதிகமாகத் தெளிவுபடுத்துகிறார். இந்த ஊழியம் மணவாட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படுதலுக்கான விசுவாசத்தைக் (Rapturing Faith) கொடுக்கிறது. இது மணவாட்டியைப் பரிபூரணமடையச் செய்து கர்த்தரை மத்திய ஆகாயத்தில் சந்திப்பதற்கு அவளை ஆயத்தப்படுத்துகிறது.

## 10. சரீர மறுரூபமாக்கப்படுதலும் எடுத்துக் கொள்ளப்படுதலும் (Body Change and Rapture)

உலகமெங்கும் இருக்கும் கிறிஸ்தவர்கள் கர்த்தருடைய இரண்டாம் வருகையை எதிர்நோக்கியிருக்கிறார்கள். நாம் அதை எடுத்துக்கொள்ளப்படுதல் (Rapture) என்று சொல்லுகிறோம். ஆனால் எடுத்துக்கொள்ளப்படுதல் என்பது மணவாட்டிக்கு மட்டும் கொடுக்கப்படுகிற ஒரு வெளிப்பாடாக இருக்கிறது (Rapture is a Revelation).

1 தெசலோனிக்கேயர் 4:16,17 ல் எழுதியிருக்கிறபடி, எடுத்துக்கொள்ளப்படுதலானது ஆரவாரம், சத்தம், எக்காளம் (Shout, Voice, Trump) என்ற மூன்று பகுதிகளைக் கொண்டதாக இருக்கிறது. ஆரவாரம், சத்தம், எக்காளம் என்பது இந்த நேரத்திற்குரிய செய்தியைக் குறிக்கும் ஆவிக்குரிய வார்த்தைகள் (Spiritual Terms). ஆரவாரம், ஒரு கூட்டமான ஜனத்தைப் பலஜனங்களிலும், ஜாதிகளிலும், பாஷைக் காரரிலிருந்தும் இந்த நேரத்திற்குரிய செய்தியில் கொண்டு வருகிறது. பிரதான தூதனுடைய சத்தமானது பலமுள்ள தூதனாகிய கிறிஸ்துவின் சத்தமாக இருக்கிறது. அவருடைய சத்தம் உயிர்த்தெழுதலின் வல்லமையை (Power of Resurrection) உடையதாக இருக்கிறது. அது லாசருவைக் கல்லறையிலிருந்து வெளியே கொண்டுவந்தது.

இன்றைக்கு அவருடைய சத்தம் மணவாட்டியை விழிப்படையச் செய்து, அவள் ஆத்துமாவை உயிர்ப்பித்து (Quickens her soul) அவளை முதிர்ச்சியடையச் செய்கிறது (Brings her to Maturity). நாம் கடைசி எக்காளத்திற்காகக் காத்துக் கொண்டிருக்கிறோம். அது நித்திரையடைந்த சபைக்கால பரிசுத்தவான்களுக்கு (Sleeping Saints) மகிமையான உயிர்த்தெழுதலைக் (Glorious Resurrection) கொண்டு வரும். பின்பு பூரணமடைந்த உயிரோடிருக்கும் பரிசுத்தவான்களும் (Living Saints) ஒரு இமைப்பொழுதில் மறுரூபமாக்கப்பட்டு, இரண்டு கூட்டத்தாரும் கர்த்தரை ஆகாயத்தில் சந்திப்பார்கள் (1 கொரிந்தியர் 15 : 51, 52).

1963 பிப்ரவரி 28ம் தேதி, பலமுள்ள தூதனாகிய கிறிஸ்து (Christ, The Mighty Angel) வானத்திலிருந்து ஒரு மேகத்தில் இறங்கிவந்தார். (வெளிப்படுத்தல் 10 : 1) அவர் ஏழு முத்திரைகளை உடைத்து ஏழாம் தூதனுக்கு இரகசியத்தை வெளிப்படுத்தினார். ஏழாம் தூதன் அதைச் சபைக்கு வெளிப்படுத்தினார் (வெளி 22 : 16). வெளிப்படுத்தல் 5ம் அதிகாரத்தில் ஏழு முத்திரைகளால் முத்திரிக்கப்பட்டிருந்த மீட்பின் புஸ்தகம், வெளிப்படுத்தல் 10ம் அதிகாரத்தில் திறக்கப்பட்ட புஸ்தகமாக இருக்கிறது. எனவே, நாம் கிறிஸ்துவின் இரண்டாம் வருகையின் நேரத்தில் இருக்கிறோம். நாம் இப்பொழுது ஏழாம் தூதனின் சத்தத்தின் நாட்களில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம்.

கிறிஸ்து இப்பொழுது வார்த்தையின் ரூபமாக (Word Form) நம்மோடு இருக்கிறார். ஏழு முத்திரைகள் திறக்கப் படுதலானது உலகத்துக்குக் கிறிஸ்துவை வார்த்தையின் ரூபமாகக் கொண்டு வந்திருக்கிறது. (The Opening of the Seven Seals brought Christ back to earth in Word Form) வார்த்தையில் மறைந்திருந்த கிறிஸ்து இப்பொழுது திரை நீக்கப்பட்டிருக்கிறார்.

எனவே, கர்த்தருடைய வருகையானது ஏற்கனவே ஆரம்பித்திருக்கிறது. ஆனால் இன்னும் முடியவில்லை. நம்முடைய சரீர மீட்பாகிய (Body Redemption) சரீர மறுரூபமாக்கப்படுதலை (Body Change) நாம் பெறும்போது கர்த்தருடைய வருகை முடிவடையும். கர்த்தர் தாமே உங்களை ஆசீர்வதிப்பாராக.

## ஆமென்

*"Do you believe this?"* *- John 11:26*

"இதை விசுவாசிக்கிறாயா?" - யோவான்:11:26


**கல்வாரி கூடாரம்**

**8, கலைஞர் தெரு, வளசரவாக்கம்,**

**சென்னை 600 087**

**Phone : +91 9884720958**

**websites : www.calvarytabernacle.in**

**www.calvarytabernaclemessage.in**



**Private Circulation Only**